# தோழர் P.முருகேசனுக்கு அஞ்சலி

நமது இயக்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான தோழர் P.முருகேசன் மதுரை அவர்கள் இன்று (29.06.2015) காலை ஒரு விபத்தில் காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆரம்ப காலம் முதற்கொண்டே நமது இயக்கத்தில் முன்னணியில் நின்று பணியாற்றிய தோழர் முருகேசன், ITEU சங்கத்தின் மதுரை மாவட்ட செயலாளராகவும், மாநில பொருளாளர் உள்ளிட்ட பல பொருப்புகளிலும் திறம்பட செயலாற்றியவர். தற்போது நமது AIBDPA சங்கத்தின் மதுரை மாவட்ட தலைவராக திறம்பட பணியாற்றிக் வந்தார். அவர் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் மாநில அமைப்பு செயலாளர் தோழர் P.சந்திரசேகர் அவர்களின் தமையனார் ஆவர். அந்த தோழரின் மறைவு நமது இயக்கத்திற்கு ஒரு பேரிழப்பாகும். இன்று (29.06.2015) மாலை 3.00 மணியளவில் அவரது இறுதிச்சடங்கு மதுரை விளாங்குடியில் நடைபெறும்.

அந்த தோழரின் மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது. அவரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும், மதுரை மாவட்ட தோழர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்கிக் கொள்கிறோம்.